# பொதுமக்களுக்கான அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# அதிகாரமளிக்கப்படாத நிதித்தொழில் மற்றும் வைப்பு ஏற்றல்

## அத்தபத்து முதியன்செலாக தம்மிக்க குமார அத்தபத்து
## மற்றும்
## இயோன் லங்கா இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பில்ம் புரடக்ஷன் இன்டர்நெஷனல் கம்பனி (பிறைவேட்) லிமிடெட் (PV 125740)

இவ்வறிவித்தலானது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 42ஆம் பிரிவின் கீழ் கொண்டு நடாத்தப்பட்ட விசாரணையொன்றினைத் தொடர்ந்து 2020.09.15 ஆம் திகதியன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது **"சமன் கெகுலா", அம்பலாவ, டெமடலுவ, குருநாகல்** என்ற இடத்தில் அமைந்துள்ள அத்தபத்து முதியன்செலாக தம்மிக்க குமார அத்தபத்து (693041988 V) மற்றும் இயோன் லங்கா இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பில்ம் புரடக்ஷன் இன்டர்நெஷனல் கம்பனி (பிறைவேட்) லிமிடெட் இரண்டும் சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக நிதித்தொழிலை கொண்டு நடாத்தியுள்ளனர் அல்லது கொண்டு நடாத்துகின்றனர் அல்லது வைப்புகளை ஏற்றுக்கொண்டுள்ளனர் அல்லது ஏற்றுக்கொள்கின்றனர் எனத் தீர்மானித்துள்ளது என்பதனை பொதுமக்களுக்கு அறிவிப்பதற்காக சொல்லப்பட்ட சட்டத்தின் 42(10) ஆம் பிரிவின் கீழ் பொது நலனுக்காக வெளிவிடப்படுகின்றது.

அதற்கமைய, இலங்கை மத்திய வங்கியின் நாணச் சபையானது பின்வருமாறு பணிப்புரை விடுத்துள்ளது;

(i) மேற்குறித்த தனிப்பட்டவரும் கம்பனியும் வாக்குறுதிச் சான்றிதழ்களை வழங்குதல் ஊடாக அல்லது ஏதேனும் வேறு விதத்தில் மேலும் **வைப்புக்களை ஏற்றுக்கொள்ளலாகாது** அத்துடன் **நிதித்தொழிலை மேற்கொள்ளலாகாது.**

(ii) மேற்குறித்த தனிப்பட்டவரும் கம்பனியும் வைப்பாளர்களுக்கு முழுமையான தீர்ப்பனவினை செய்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க காலம் வரையறை செய்யப்பட்ட மீள்கொடுப்பனவு திட்டமொன்றினைத் தீர்மானத் திகதியில் இருந்து 14 நாட்களினுள் சமர்ப்பித்தல்.

இலங்கை மத்திய வங்கியானது மேற்குறித்த தனிப்பட்டவரும் கம்பனியும் வைப்புக்களை அல்லது ஏதேனும் வேறு வடிவில் நிதியங்களை கோருதல் அல்லது திரட்டுதல், சொத்துகளை விற்பனை செய்தல்/பாராதீனப்படுத்தல், ஏதேனும் கணக்கு, ஆதனம் அல்லது முதலீடு தொடர்பில் ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளுதல் என்பவற்றை தடுக்கின்ற தடைக் கட்டளைகளை ஏற்கனவே வழங்கியுள்ளது.

**நாணயச் சபை**
**இலங்கை மத்திய வங்கி**

இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01

0112477000, 0112440330, 0112330220 @ cbslgen@cbsl.lk http://www.cbsl.gov.lk